உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

# இராமலிங்கபிள்ளை

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# காட்சிக்கண்ணி.

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசைபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுபானு ௵.

# திருச்சிற்றம்பலம்.

# இராமலிங்கபிள்ளை

## காட்சிக்கண்ணி.

---

### வெண்பா.

சத்தமுறுமெய்ஞ்ஞானச் சோதியுருவாய்வந்த
வித்தகஞ்சேராமலிங்க வேளுரைத்த-வுத்தமஞ்சே
கர்த்தனருளாங்காட்சி கண்ணிகளைச்சிந்தித்தால்
அர்த்தமுடன் முத்தியுலகாம்.

சாமா-சாப்புதாளம்.

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி. அம்மா
அற்புதக்காட்சியடி. (௧

ஜோதிமலையொன்று தோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி. அம்மா
வீதியுண்டாச்சுதடி. (௨

வீதியிற்சென்றே னவ்வீதியினடுவொரு
மேடையிருந்ததடி. அம்ம
மேடையிருந்ததடி. (௩

மேடைமேலேறினேன் மேடைமேலங்கொரு
கூடமிருந்ததடி அம்மா
கூடமிருந்ததடி (௪)

கூடத்தில் நாடவக் கூடமேலேழ்நிலை
மாடமிருந்ததடி அம்மா
மாடமிருந்ததடி, (௫)

ஏழ்நிலைக்குள்ளு மிருந்தவதிசயம்
என்னென்றுசொல்வேனடி அம்மா
என்னென்றுசொல்வேனடி, (௬)

ஓர்நிலைதன்னி லொளிர்முத்துவெண்மணி
சீர்நிலமாச்சுதடி அம்மா
சீர்நிலமாச்சுதடி (௭)

பாரோர்நிலையிற் கருநீலஞ்செய்ய
பவளமாச்சுதடி அம்மா
பவளமாச்சுதடி, (௮)

மற்றோர்நிலையில் மரகதப்பச்சைசெம்
மாணிக்கமாச்சுதடி அம்மா
மாணிக்கமாச்சுதடி, (௯)

பின்னோர்நிலையிற்பெருமுத்துவச்சிர
பேர்மணியாச்சுதடி அம்மா
பேர்மணியாச்சுதடி, (௰)

வேறோர் நிலையில் மிகும்பவளத்திரள்
வெண்மணியாச்சுதடி அம்மா
வெண்மணியாச்சுதடி, (௧௧)

பக்லோர் நிலையிற் பொருந்தியபன்மணி
பொன்மணியாச்சுதடி அம்மா
பொன்மணியாச்சுதடி, (௧௨)

பதியோர் நிலையிற் பகர்மணியெல்லாம்
படிகமதாச்சுதடி அம்மா
படிகமதாச்சுதடி, (௧௩)

ஏழ்நிலைமேலேயிருந்ததோர்தம்பம்
இசைந்தபொற்றம்பமடி அம்மா
இசைந்தபொற்றம்பமடி, (௧௪)

பொற்றம்பங்கண்டேறும் போதுநான்கண்ட
புதுமையென்சொல்வேனடி அம்மா
புதுமையென்சொல்வேனடி, (௧௫)

ஏறும்போதங்கே யெதிர்ந்தவகைசொல்ல
என்னளவல்லவடி அம்மா
என்னளவல்லவடி, (௧௬)

ஆங்காங்கேசத்திக ளாயிரமாயிரம்
ஆகவந்தார்களடி அம்மா
ஆகவந்தார்களடி, (௧௭)

வந்துமடக்க மயங்காமனருள்
வல்லபம்பெற்றேனடி அம்மா
வல்லபம்பெற்றேனடி, (௧௮)

வல்லபத்தாலந்த மாதம்பந்தேறி
மணிமுடிகண்டேனடி அம்மா
மணிமுடிகண்டேனடி, (௧௯)

மணிமுடிமேலோர் கொடிமுடிநின்றது
மற்றதுகண்டேனடி அம்மா
மற்றதுகண்டேனடி, (௨௰)

கொடிமுடிமேலாயிரத் தெட்டுமாற்றுப்பொற்
கோயிலிருந்ததடி அம்மா
கோயிலிருந்ததடி, (௨௧)

கோயிலைக்கண்டங்கே கோபுரவாயிலிற்
கூசாதுசென்றேனடி அம்மா
கூசாதுசென்றேனடி, (௨௨)

கோபுரவாயிலுட்சத்திகள் சத்தர்கள்
கோடிபல்கோடியடி அம்மா
கோடிபல்கோடியடி, (௨௩)

ஆங்கவர்வண்ணம்வெள்வண்ணஞ்செவ்வண்ண
ஐவண்ணமாகுமடி அம்மா
ஐவண்ணமாகுமடி, (உச)

அங்கவெல்லாமிங் காரிலொன்றையும்
அப்பாலேசென்றேனடி அம்மா
அப்பாலேசென்றேனடி, (உரு)

அப்பாலைசென்றேனங் கோர்திருவாயிலில்
ஐவரிருந்தாரடி அம்மா
ஐவரிருந்தாரடி, (உசா)

மற்றவர்நின்று வழிகாட்டமேலோர்
மணிவாயிலுற்றேனடி அம்மா
மணிவாயிலுற்றேனடி, (உள)

என்னும்வாயிலிற்பெண்ணோடாணாக
இருவரிருந்தாரடி அம்மா
இருவரிருந்தாரடி, (உஅ)

அங்கவர்காட்ட வனுக்கத்திருவாயில்
அன்போடுகண்டேனடி அம்மா
அன்போடுகண்டேனடி, (உகூ)

அத்திருவாயிலி லானந்தவல்லியென்
அம்மையிருந்தாளடி அம்மா
அம்மையிருந்தாளடி. (௩௰)

அம்மையைக்கண்டே னவளருள்கொண்டேன்
அமுதமுமுண்டேனடி அம்மா
அமுதமுமுண்டேனடி. (௩௧)

தாங்குமவளரு ளாலேநடராஜர்
சந்நிதிகண்டேனடி அம்மா
சந்நிதிகண்டேனடி. (௩௨)

சந்நிதியிற்சென்று நான்பெற்றபோது
சாமியறிவாரடி அம்மா
சாமியறிவாரடி. (௩௩)

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா
அற்புதக்காட்சியடி. (௩௪)

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்,

வானத்தின்மீது மயிலாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயில்குயிலாச்சுதடி, (க)

துள்ளலைவிட்டுத் தொடங்கினேன்மன்றுடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
வள்ளலைக்கண்டேனடி, (உ)

சாதிச்சமயச் சழக்கைவிட்டேனருட்
சோதியைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி, (ங)

பொய்மையொழித்துப் புறப்பட்டேன்மன்றுடும்
ஐயரைக்கண்டேனடி அக்கச்சி
ஐயரைக்கண்டேனடி, (ச)

முற்றுப்பெற்றது,